ந.க.எண். 14167/2007/இ1

பேரூராட்சிகள் இயக்ககம்
குறளகம், சென்னை – 108.

நாள்: 26 .7.2007

**சுற்றறிக்கை**

பொருள் : பேரூராட்சிகள் நிர்வாகம் – பேரூராட்சி பகுதிகளில் உள்ள அனுமதியற்ற சுவரொட்டிகள் அகற்றப்பட வேண்டும்.

பார்வை : அரசு செயலரின் நே.மு.க.எண். 42/நகராட்சிகள் நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 24.7.2007.

நகர்புற உள்ளாட்சிகளின் பொது சொத்துக்கள் மற்றும் விளம்பரங்கள் மீது அனுமதியற்ற சுவரொட்டிகள் ஒட்டப்படுவதால் பொது சொத்துக்களின் அழகு கெடுவதோடு, நகரப்பகுதி மாசுபடுகிறது. பார்வையில் சுட்டப்பட்ட அரசின் கடிதத்தில் நகர்ப்புற பகுதிகளில் சுவரொட்டிகளை அகற்றுவதோடு மீண்டும் ஒட்டாமல் கண்காணிக்க வேண்டும் என பணிக்கப்பட்டுள்ளது.

ஆகவே, அனைத்து மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்களும் தங்கள் கட்டுப்பாட்டில் உள்ள அனைத்து பேரூராட்சி பகுதிகளிலும் அரசு கட்டிடங்கள், பேரூராட்சி அலுவலகக் கட்டிடம், மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி, விளம்பரப் பலகை, பள்ளிக்கட்டிடம், திருக்கோயில்கள், பேருந்து நிலையம் மற்றும் இதர பொது கட்டிடங்களின் மீது ஒட்டப்பட்டிருக்கும் அனைத்து விதமான சுவரொட்டிகளையும் (Posters) இக்கடிதம் கிடைக்கப் பெற்ற ஒரு வாரத்திற்குள் முழுமையாக அகற்றப்பட வேண்டும். விவரம் உடன் இவ்வியக்கத்திற்குத் தெரிவிக்க வேண்டும்.

இயக்குநருக்காக

பெறுநர்

அனைத்து மண்டல உதவி இயக்குநர்கள்